www.tamilarangam.net

# மலையகத் தமிழர் சிக்கலைத் தீர்ப்போம்

இலங்கையில் பத்து இலக்கத்திற்கும் மிகுதியான மலையகத் தமிழர்கள் வாழ்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் இன்றும் 'நாடற்றவர்' என்ற பெயரிலேயே வாழ்கின்றனர். தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் இந்தத் தமிழர்களின் வரலாறு ஒரு கண்ணீர்க் கதை.

1802 ஆம் ஆண்டு நுழைந்து 1815 இல் மலையகம் உட்பட இலங்கை முழுவதையும் கைப்பற்றிய வெள்ளைக்காரன் 1820க்குப் பின் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையைத் தொடங்கினான்.

இலங்கையில் அவன் குறுக்கம் (ஏக்கர்) மூன்றேகால் உருபாய் விலையில் வாங்கியதோடு 1840 இல் முடியரசுக் காணிச் சட்டம், 1856இல் கோவில் காணிப் பதிவுச் சட்டம் என்று போட்டு நிலத்தை மக்களிடமிருந்து பறித் தான். நிலத்தைப் பறித்த வெள்ளைக்காரனுக்கு அதைத் திருத்த தொழி லாளர்கள் கிடைக்கவில்லை. உள்நாட்டில் எடுத்த முயற்சியும் சீனாவிலிருந் தும், ஆப்பிரிக்காவிலிருந்தும் ஆட்களை இறக்க எடுத்த முயற்சியும் பயனளிக்க வில்லை.

இந்தியாவைச் சுரண்டிய வெள்ளையன் ஆயக்கட்டுக்களைப் புதுப்பிக் காது உழவுத் தொழிலைச் சீரழித்தான். குறைந்த கூலிக்கு உழைப்பை விற்றுப் பிழைக்கும் நிலைக்கு ஆளான உழவுத் தொழிலாளர்களைத் தாய் நாட்டை விட்டுப் பிற நாடுகளில் கூலி வேலை செய்ய அழைத்துச் சென்றான்.

## குடியேற்றம்:

1821 ஆம் ஆண்டு முதன் முறையாகப் பாதைகள், பாலங்கள் அமைக்கத் தமிழர்கள் இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். 1823 ஆம் ஆண்டு சியார்சு பேர்டு என்ற வெள்ளையன் கம்பளையிலுள்ள சின்னாப்பிட்டிய தோட்டத்தில் வேலை செய்ய முதன் முதலாகத் தமிழகத் தொழிலாளர் களை அழைத்துச் சென்றான். ஏனைய முதலாளிகளையும் தமிழகத் தொழி லாளர்களை அழைக்கத் தூண்டினான்.

ஆயிரக் கணக்கான தமிழர்கள் கடல் கடந்து தலைமன்னாரிலும் கடற்கரைப் பகுதிகளிலும் இறங்கினர். காட்டுப் பாதைகளைக் கடந்து அநுராதபுரம், மாத்தளை வழியாகக் கண்டியை அடைந்தனர். 150 கல் முதல் 200கல் வரை மலை நாட்டுத் தோட்டங்களை அடைய நடக்க வேண்டியிருந் தது. அவர்களுள் உணவின்றி, நோய்வாய்ப்பட்டுக் கண்டி நகரை அடையும் முன் மாண்டோர் பலர்.

"இறந்தவர்களின் எலும்புகள் மிதிபட்டுத் தூளாகிக் காட்டுப் பாதை கூட வெண்மை நிறமாகத் தோன்றியது" என்று வெள்ளை அதிகாரியே அவர்களின் பயணக் காட்சியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளான். (இலங்கை இந்தியர் பிரச்னை, எஃச். நடேசன், பக். 3) எவ்வளவு கொடுமை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1827 இல் பத்தாயிரமாகச் சென்ற தமிழர்களின் தொகை 1846இல் எண்பதாயிரம் ஆனது 1870 வரை குளம்பிப் (காபி) பயிரிட்டு வந்த முதலாளிகள் அந்த ஆண்டிற்குப் பின் குளம்பிச் செடிகளைப் பூச்சி அரித்த தால் தோட்டங்களில் தேயிலை பயிரிட முயன்று வெற்றியும் கண்டனர். குளம்பிப் பயிர் அழிந்த போது குறையத் தொடங்கிய தொழிலாளர்களின் குடியேற்றம் தேயிலை பயிரிடத் தொடங்கியதும் 1877 இல் 25 இலக்கம் என்று பெருகியது.

இலங்கைக் காட்டைத் திருத்திய போது சூழல் ஒத்துக் கொள்ளாமல் நோய்வாய்ப்பட்டும் தாயகம் திரும்ப வழியின்றி வெள்ளையனின் கங்காணி கள் ஒடுக்கிய கொடுமையாலும் சென்ற நூற்றாண்டில் 20 இலக்கம் தமிழர் கள் அம்மண்ணிலேயே மடிந்தனர். (இந்திய—இலங்கை நெருக்கடி; நடேச (ஐயர்) பக் 113).

தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பால் இலங்கை முன் எப்போதையும் விடச் செழிப்படைந்தது. ஆனால் தொழிலாளர் வாழ்வு சீரடையவே இல்லை. தமிழ் நாட்டிலிருந்து சென்ற தொழிலாளர்களைத் தொடர்ந்து வணிகக் கூட்டமும் வட்டிக் கடைக் கூட்டமும் சென்று அவர் களை மேலும் சுரண்டியது.

முதல் உலகப் போருக்குப் பின் 1919 இல் இலங்கை செல்லும் தமிழர் தொகை குறையத் தொடங்கியது இரண்டாம் உலகப் போர் தொடங்கிய 1939இல் நேரு இலங்கை சென்று திரும்பினார். அதன்பின் தமிழர்கள் இலங்கை செல்வது தடைசெய்யப்பட்டது.

## தொடர்பு துண்டித்தது

குளம்பிப் பயிர் செய்த போது அறுவடை நேரத்தில் கூலிகளாகத் தமிழ கத்திலிருந்து மிகுதியாகச் சென்று திரும்பிய தமிழ்த்தொழிலாளிகள் தேயிலை பயிரிடத் தொடங்கியதும் அங்கேயே தங்கத் தொடங்கினர். அதனால் தமிழகத் தொடர்பு அற்றுப் போகத் தொடங்கியது. காலப் போக்கில் இங் கிருந்த குடிசைகளை—நிலங்களை உறவினர்கள் எடுத்துக் கொண்டார்கள்.

இலங்கையில் தங்கிய தமிழர்கள் 1940 இல் தொடங்கிய இந்தியத் தொழி லாளர் காங்கிரசில் பெரும்பான்மையாகச் சேர்ந்தனர். 1947 இல் இலங்கை இந்தியக் காங்கிரசு ஒன்றிய தேசியக் கட்சியை (யு.என்.பி.) எதிர்த்து நின்று ஏழு இடத்தில் வெற்றி பெற்றது. கண்டியில் நடந்த தேர்தலில் ஒ.தே.க. (யு.என்.பி.) தோற்றுப் போய் வழக்குத் தொடர்ந்து திரும்பவும் தேர்தலில் நின்றது. மீண்டும் தோற்றது. 1949 இல் மூன்றாம் முறையாக நடந்த தேர்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லிலும் ஒ.தே. கட்சி தோற்றது. இதனால் ஒன்றியத் தேசியக் கட்சியினர் தோட்டத் தொழிலாளர்கள் மீது ஆத்திரம் கொண்டனர். இலங்கை இந்தியக் காங்கிரசு போட்டியிட்ட தொகுதிகள் தவிர மேலும் பத்துத் தொகுதிகளில் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் வெற்றி—தோல்வியைத் தீர் மானிக்கும் நிலையில் இருந்தன.

1948 ஆம் ஆண்டு பெப்ருவரி 4 ஆம் நாள் ஒன்றிய தேசியக் கட்சி இலங்கை விடுதலையைப் பெற்றது. ஆகச்டு மாதமே குடியுரிமைச் சட்டத்தை கொண்டு வந்தது தமிழ்த் தொழிலாளர்கள் குடியுரிமை பெறப்பல கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டன. 1949 ஆம் ஆண்டுச் சட்டம் தோட்டத் தொழி லாளர்களின் வாக்குரிமையை அடியோடு பறித்தது. குடியுரிமைச் சட்டங்கள் பாட்டாளி மக்களின் வலுவைக் குறைக்கவும் முன்னேற்றத்தை முடக்கவும் பயன்படுத்தப்பட்டன.

இலங்கையில் வாழும் தோட்டத் தொழிலாளர்களில் 90 விழுக்காட்டினர் அங்கேயே பிறந்து வளர்ந்தவர்கள். இலக்கக் கணக்கான மக்கள் இந்திய மண்ணை—ஏன் கடலையே கூடக் கண்டறியாதவர்கள். இன்றும் பத்து இலக்கம் பேர் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டு 'நாடற்றவர்' என்ற பெயரில் அடிமைகளைப் போல அந்நாட்டில் வாழ்கின்றனர்.

## ஒப்பந்தங்கள்

இந்தத் தமிழர்களின் சிக்கலைத் தீர்ப்பதற்காக 1940 இல் தில்லியிலும் 41 இல் கொழும்பிலும் செய்த ஏற்பாடுகள் தோல்வி அடைந்தன. 1953 ஆம் ஆண்டு சூன் மாதம் இலண்டனில் நேருவும் தத்லி சேன நாயகாவும் பேச்சு நடத்தினர். 1954 சனவரியில் தில்லியில் நேருவும் கொத்தலாவலையும் பேச்சு நடத்தினர்; இரண்டுமே தோல்வியில் முடிந்தன.

1964 ஆம் ஆண்டு அக்டோபரில் சிறிமா—சாத்திரி ஒப்பந்தம் கையெழுத் தானது. இதன்படி ஒன்பது இலக்கத்து 75 ஆயிரம் மலையகத் தமிழர்களில் மூன்று இலக்கம் பேருக்கு இலங்கைக் குடியுரிமையும் 5 இலக்கத்து 25 ஆயிரம் பேருக்கு இந்தியக் குடியுரிமையும் வழங்குவதென முடிவு செய்யப்பட்டது. எஞ்சிய ஒன்றரை இலக்கம் பேரை 1974 ஆண்டு சிறிமா—இந்திரா உடன்பாட் டின்படி ஆளுக்குப் பாதியாக்கிக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

இவற்றின்படி ஏறத்தாழ நான்கு இலக்கம் பேர் இந்தியாவுக்குத் திரும்பி யுள்ளனர். இலக்கம் பேருக்குத்தான் இதுவரை இலங்கைக் குடியுரிமை கிடைத்துள்ளது.

ஒப்பந்தப்படித் திரும்புகிறவர்களின் கதை ஒரு தனிக் கண்ணீர்க் கதை. மூட்டை முடிச்சுகளோடு கிளம்புவதற்குள் இலங்கை அரசு வைத் திருக்கும் நடைமுறைகளைத் தாண்டுவதே (எல்லைக் கடவு முதலியன)

www.tamilarangam.net



பெரிய தொல்லை. தோட்டங்களிலிருந்து தலை மன்னார் வருவதற்குள் வழிப்பறி—கொள்ளை. தலை மன்னாரிலிருந்து மண்டபம் வந்தபின் இங்கு 'நம்மவர்' அடிக்கும் கொள்ளைக்கும் அளவே கிடையாது.

இங்கிருந்து தோட்டம் திருத்தப்போய் இலக்கக்கணக்கில் இறந்தது போலவே அங்கிருந்து இங்குத் திரும்பிய நான்கு இலக்கம் பேரில் ஓர் இலக்கம் பேர் நம் மண் ஒத்துக் கொள்ளாமல் மாண்டுவிட்டனர்.

தோட்டத்துக் குடிசைகளில் சாதியை மறந்து ஒற்றுமையாய் வாழ்ந்த காலம் போய்த் தமிழகத்திற்கு வந்து சாதிப் பேயிடம் மாட்டித் தவிக்கும் நிலை ஒரு பக்கம்.

தேயிலைத் தோட்டத் தொழில் மட்டுமே தெரிந்த அந்த மக்களைக் கொண்டுவந்து பெட்டிக்கடை நடத்து என்பதும் காணி வாங்கிப்பயிரேற்று என்பதும் இவர்கள் கொடுக்கும் மூவாயிரத்தில் முடியுமா என்பது மறுபக்கம்.

## மறுவாழ்வு

இலங்கைப் பாட்டாளிகளான மலையகத் தமிழர்கள் ஈழப் போராட்டங்கள் நடைபெற்ற போதெல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டனர். இலங்கையின் வருவாயில் 60 விழுக்காட்டிற்கு மேல் தேடித்தரும் தொழிலாளர்களின் நிகழ்காலம் துன்பமயமானது; எதிர்காலமோ இருள்மயமாயுள்ளது.

அல்லற்பட்டு ஆற்றாது வாடும் தோட்டத்தொழிலாளர்களின் சிக்கல் நிலையாகத் தீர்க்கப் படவேண்டும்.

இந்திய அரசும் இலங்கை அரசும் தமிழ் நாட்டரசும் தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு கீழ்க்கண்டவற்றை நிறைவேற்ற வேண்டும்.

31-10-82-ஆம் நாளோடு முடிந்த சிறிமா-சாத்திரி ஒப்பந்தத்தையும், சிறிமா-இந்திரா உடன்பாட்டையும் முற்றாகக் கைவிட வேண்டும்.

எந்த வகையான நாடுகடத்தும் ஒப்பந்தத்தையும் எந்த நாட்டுடனும் நடுவணரசு செய்து கொள்ளக்கூடாது.

பழைய ஒப்பந்தப்படி இந்தியா வரவேண்டியவர்களை ஒப்பந்தக்காலம் முடிந்துவிட்டதால் இங்கே அனுப்பவிடக்கூடாது.

இலங்கை மலையகத் தமிழர்களுக்குக் குடியுரிமையும் வாக்குரிமையும் அளித்து அந்த நாட்டுக் குடிமக்களாக்க வேண்டும்.

ஒப்பந்தப்படி இந்தியாவுக்கு வந்துள்ள மலையகத் தமிழர்களுக்கு வாழ்வளிக்கும் பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

**தமிழியக்கம்**

சென்னை—செங்கை

**தமிழக-ஈழ நட்புறவுக்கழகம்**

தமிழ் நாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்